Long Service Corporation
(நீண்டகாலச் சேவை நிறுவனம்)



# தொழிலாளர் தகவல் தாள்

**Portable long service leave (கொண்டுசெல்லத்தக்க நீண்டகாலச் சேவை விடுப்பு)**

---

## கொண்டுசெல்லத்தக்க நீண்டகாலச் சேவை விடுப்பு என்றால் என்ன?

நியூ சவுத் வேல்ஸ் சமூகச்சேவைகள் துறையில் உள்ள முழுநேர, பகுதிநேர மற்றும் தற்காலிகத் தொழிலாளர்களுக்காக, கொண்டுசெல்லத்தக்க நீண்டகாலச் சேவை விடுப்பு தற்போது நடைமுறையில் உள்ளது. இது, வெவ்வேறு நிறுவனங்களில் (employers) பணியாற்றிய அங்கீகரிக்கப்பட்ட சேவைக் காலத்தை மொத்தமாகச் சேர்த்துக்கொள்ள அனுமதிக்கிறது.

இந்தத் திட்டமானது, கட்டிடம் மற்றும் கட்டுமானம், ஒப்பந்த அடிப்படையிலான துப்புரவு, மற்றும் சமூகச்சேவைகளுக்கான துறைகள் அனைத்துக்கும் கொண்டுசெல்லத்தக்க நீண்டகாலச் சேவை விடுப்புத் திட்டங்களை நிர்வகிக்கும் பொறுப்புள்ள நியூ சவுத் வேல்ஸ் அரசாங்க நிறுவனமான Long Service Corporation (LSC) (நீண்டகாலச் சேவை நிறுவனத்தால், LSC) நிர்வகிக்கப்படுகிறது.

## சமூகச்சேவைகள் துறைக்கான கொண்டுசெல்லத்தக்க நீண்டகாலச் சேவை விடுப்புத் திட்டம்

கொண்டுசெல்லத்தக்க நீண்டகாலச் சேவை விடுப்புத் திட்டம் 1 ஜூலை 2025 அன்று தொடங்கியது, மேலும் அந்தத் தேதியிலிருந்து நீங்கள் செய்யும் எந்தப் பணியும் உங்கள் விடுப்பிற்காகக் கணக்கிடப்படும். சமூகச்சேவைகள் துறையில் 7 ஆண்டுகள் அங்கீகரிக்கப்பட்ட சேவையை நிறைவு செய்த பிறகு நீங்கள் கொண்டுசெல்லத்தக்க நீண்டகாலச் சேவை விடுப்பை எடுத்துக் கொள்ளலாம்.

1 ஜூலை 2025 முதல், பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்கள் உங்களுக்காக Portable Long Service Leave Fund (கொண்டுசெல்லத்தக்க நீண்டகாலச் சேவை விடுப்பு நிதியம்) காலாண்டு பங்களிப்புகளைக் கட்டாயம் மேற்கொள்ள வேண்டும். நீங்கள் இந்தத் துறைக்குள் வேலையை மாற்றினால், உங்கள் அங்கீகரிக்கப்பட்ட சேவைக் காலம் இந்தத் திட்டத்திலேயே நீடித்து, தொடர்ந்து அதிகரித்துக்கொண்டே போகும்.

1 ஜூலை மற்றும் 31 டிசம்பர் 2025-க்கு இடைப்பட்ட காலத்தில் சமூகச்சேவைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள், LSC-யிடமிருந்து 365-நாள் அடிப்படைத் தொழிலாளர் சேவைகளுக்கான வரவையும் (Foundation Worker service credit) பெறுவார்கள்.

# நீண்டகாலச் சேவை நிறுவனம்

இந்த கொண்டுசெல்லத்தக்கத் திட்டமானது, உங்கள் தற்போதைய நிறுவனத்திடம் நீங்கள் ஏற்கனவே ஈட்டிய எந்த நீண்டகாலச் சேவை விடுப்பையும் மாற்றுவதில்லை. Long Service Leave Act 1955 (நீண்டகாலச் சேவை விடுப்புச் சட்டம் 1955) -இன் கீழ் நீங்கள் நீண்டகாலச் சேவை விடுப்புக்குத் தகுதி பெற்றால், அந்த விடுப்பை உங்கள் நிறுவனத்திடமிருந்து நேரடியாகக் கோர வேண்டும்.

## இதில் யாரெல்லாம் அடங்குவர்?

நீங்கள் நியூ சவுத் வேல்ஸ் சமூகச்சேவைகள் துறையில் தகுதியான பணியைச் செய்திருந்தால், நீங்கள் இதில் அடங்குவீர்கள். அது உங்கள் பதவிப் பெயரை மட்டும் சார்ந்தது அல்ல, மாறாக நீங்கள் வழங்கும் சேவையின் வகை மற்றும் நீங்கள் செய்யும் பணியை அடிப்படையாகக் கொண்டதாகும்.

Service NSW (சேவை நியூ சவுத் வேல்ஸ்) மூலம் சமூகச்சேவைகள் தொழில் வணிகத் தேடல் கருவியைப் (Community Services Industry Business Lookup Tool) பயன்படுத்தி உங்கள் நிறுவனம் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதை நீங்கள் சரிபார்க்கலாம். உங்கள் நிறுவனம் பட்டியலில் இல்லை என்றால், அவர்களின் பதிவை உறுதிப்படுத்தும்படி அவர்களிடம் கேளுங்கள் அல்லது உதவி தேவைப்பட்டால் நீண்டகாலச் சேவை நிறுவனத்தைத் தொடர்பு கொள்ளுங்கள்.

## உங்கள் சேவை எவ்வாறு பதிவு செய்யப்படுகிறது

உங்கள் தொழில் வழங்குநர்(கள்) (employer(s)) தகுதியுள்ள அனைத்துத் தொழிலாளர்களையும் சேர்த்து, ஒவ்வொரு காலாண்டிலும் அவர்களின் சேவையை LSC-க்கு அறிக்கை கொடுக்க வேண்டும். நீங்கள் Worker Portal (தொழிலாளர் இணையதளம்) மூலம் உங்கள் பதிவை நிறைவு செய்து, உங்கள் தனிப்பட்ட MyService NSW (‘மை சர்வீஸ்’ நியூ சவுத் வேல்ஸ்) கணக்கு மூலம் உங்கள் அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். பதிவு செய்தவுடன், உங்கள் வாழ்க்கைப் பணி (career) முழுவதும் உங்களுடன் இருக்கும் ஒரு தொழிலாளர் எண்ணைப் பெறுவீர்கள். உங்கள் சேவை தொடர்ந்து சரியாகப் பதிவு செய்யப்படுவதை உறுதிசெய்ய, எதிர்கால நிறுவனங்களுக்கு இந்த எண்ணை நீங்கள் வழங்க வேண்டியிருக்கலாம்.

சமூகச்சேவைகள் துறையில் நீங்கள் எங்கு பணிபுரிந்தாலும் உங்கள் சேவையானது கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும். நீங்கள் நிறுவனங்களை மாற்றினாலும், LSC உங்கள் அனைத்து சேவைகளையும் கண்காணித்து அவற்றை ஒன்றாகச் சேர்க்கிறது.

## விடுப்புக்கான தகுதி மற்றும் விடுப்பு எடுத்தல்

1 ஜூலை 2025 முதல், அங்கீகரிக்கப்பட்ட 7 வருட தொழில் சேவையை நீங்கள் நிறைவு செய்தவுடன், கொண்டுசெல்லத்தக்க நீண்டகாலச் சேவை விடுப்பை எடுக்கலாம். இது பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்களிடம் நீங்கள் பணியாற்றிய மொத்த சேவையின் அடிப்படையில் அமையும்.

நீங்கள் தகுதி பெற்றவுடன், தொழிலாளர் இணையதளம் மூலம் உங்கள் விடுப்பு விண்ணப்பத்தை நீங்கள் LSC-க்குச் சமர்ப்பிக்கலாம். LSC பணம் செலுத்துவதற்கு முன்பு, உங்கள் நிறுவனம் உங்கள் விடுப்புக் கோரிக்கையை அங்கீகரிக்க வேண்டும்.

ஒரே நேரத்தில் நீங்கள் எடுக்கக்கூடிய குறைந்தபட்ச விடுப்புக் காலம் 2 வாரங்கள் ஆகும்.

உங்கள் அங்கீகரிக்கப்பட்ட சேவை மற்றும் உங்கள் மொத்த சாதாரண ஊதியங்களின் சராசரியின் அடிப்படையில் உங்கள் பண வழங்கீட்டுத் தொகை கணக்கிடப்படுகிறது. நீங்கள் விண்ணப்பிக்கும்போது LSC பண வழங்கீட்டுத் தொகையை உறுதிப்படுத்தும்.

கொண்டுசெல்லத்தக்க நீண்டகாலச் சேவை விடுப்பு பண வழங்கீட்டுத் தொகைகள் வரிக்குட்பட்ட வருமானமாகக் கருதப்படுகின்றன, மேலும் இந்த பண வழங்கீட்டுத் தொகைகளுக்கு மூதிர் ஓய்வு உதவித்தொகை (superannuation) வழங்கப்படுவதில்லை.

### உங்கள் சேவையைக் கண்காணித்தல் மற்றும் விவரங்களைப் புதுப்பித்தல்

ஏப்ரல் 2026 முதல், நீங்கள் ஒரு Worker Portal (தொழிலாளர் இணையதளம்) -ஐ அணுகலாம், அங்கு நீங்கள்:

- சமூகச்சேவைகள் துறையில் உங்கள் சேவையைக் கண்காணிக்கலாம்
- நிறுவனத்தின் பங்களிப்புகளைச் சரிபார்க்கலாம்
- உங்கள் தொடர்பு விவரங்களைப் புதுப்பிக்கலாம்.

நீங்கள் தகுதி பெற்றிருந்தால், LSC உங்கள் தொழிலாளர் சுயவிவரத்தை உருவாக்கி, அடிப்படைத் தொழிலாளர் போனஸ் வரவை (Foundation Worker bonus credit) தானாகவே சேர்க்கும். ஒவ்வொரு ஜூலை மாதமும் நீங்கள் ஒரு வருடாந்திர அறிக்கையைப் பெறுவீர்கள்.

### வேலையில் இடைவெளிகள்

நீங்கள் திரட்டிய சேவையை இழக்காமல், சமூகச்சேவைகள் துறையிலிருந்து 4 ஆண்டுகள் வரை இடைவெளி எடுக்கலாம். நிதி உதவி நிறுத்தப்பட்டாலும் அல்லது நீங்கள் தற்காலிகமாக வேறு துறைக்கு மாறினாலும் உங்கள் சேவை பாதுகாக்கப்படும்.

13 14 41 Long Service Corporation - NSW